செய்தி வெளியீடு எண்: 395

நாள் 29.6.2007

## செய்திக்குறிப்பு

பேரூராட்சிகளின் இயக்குநர் டாக்டர்.கே.கோபால் அவர்கள் தனது செய்திக்குறிப்பில், தமிழகத்திலுள்ள 561 பேரூராட்சிகளில், துரித வளர்ச்சி காணும் நகரங்கள், சுற்றுலாமையங்கள், புனிதத் தலங்கள் மற்றும் வணிக முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் உள்ளன. மாநிலத்தின் மொத்த நகர மக்கள் தொகையில் 28 சதவீதம் பேரூராட்சி பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

அனைத்து பேரூராட்சிகளுக்கும் கணினி வழங்கப்பட்டுள்ளது. ஆன்லைன் மூலம் தகவல்களை பரிமாற்றம் செய்வதே தமிழக அரசு மற்றும் இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் 2006–2007ம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவித்தபடி அனைத்து (561) பேரூராட்சிகளுக்கும் இணையதளம் உருவாக்கப்பட்டு townpanchayats.tn.nic.in என்ற இணையதள முகவரியில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தினை பயன்படுத்தி பேரூராட்சிகள் பற்றிய பொதுதகவல்களை அறிந்து கொள்ளலாம். மேலும் பேரூராட்சிகளில் சாலைப்பணிகள், வடிகால் அமைத்தல், கட்டிடங்கள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல் பணிகள், பூங்கா அமைத்தல், பேருந்து நிலையம் புதுப்பித்தல் போன்ற வேலைகள் ஜவஹர்லால் நேரு தேசிய மறு சீரமைப்பு திட்டம் (JNNURM), நகர் புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் (BSUP), சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான அடிப்படை வசதிகள்

மேம்பாட்டு திட்டம் (UIDSSMT), ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசை பகுதி மேம்பாட்டு திட்டம் (IHSDP), பகுதி 2 திட்டம், 12வது நிதிக்குழு போன்ற பலவிதமான திட்டங்களின் நிதி உதவியின் கீழ் நடைபெற்று வருகிறது. இப்பணிகளின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான இணையதளமும் உருவாக்கப் பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பேரூராட்சிகளிலும் மேற்கொள்ளப்படும் ரூ.5.00 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைகள்/ கொள்முதல்/சேவைகள் பற்றிய தகவல்கள் இந்த இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இவற்றிற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, வரைபடம் மற்றும் ஒப்பந்த படிவம் tenders.gov.in, tn.gov.in/tender, tn.gov.in/dtp, townpanchayats.tn.nic.in இணைய தளங்களில் பெற்றுக் கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தில் மாவட்டவாரியாக, பேரூராட்சிகள் வாரியாக, பணி இனங்கள் வாரியாக தேடும் வசதியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவது சாத்தியமாகிறது. மேலும் இணைய தளத்தினை பயன்படுத்தி, ஒப்பந்ததாரர்கள் எளிதான முறையில், இலவசமாக ஒப்பந்தப்படிவங்களை பெறுவதற்கு ஏதுவாகிறது என தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

2/2

வெளியீடு: செ.ம.தொ.இ, சென்னை-9.